**Judicial Form No.53**

**(See Rule 43)**

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

**திருவெண்ணெய்நல்லூர்.**

**C. C.No. 151 / 2024**

2025-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் **அ.சா. 1** -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.V.செல்வகோபால், Grade.III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | வட்டி கடை உதவியாளர் |
| பெயர். | - | திருமதி. லூசிளா | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| த/பெ. | - | தெய்வீகன் | வயது | - | 56 |
| கிராமம் | - | முகையூர் | | | |

12.02.2025

1 வது எதிரி ஆஜர். 2,3 எதிரிகள் ஆஜரில்லை. 2,3 எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**.

1. நான் தற்போது முகையூரில் வசித்து எனது கணவர் நடத்தும் வட்டி கடையில் உதவியாளராக இருந்து வருகிறேன். வழக்கின் எதிரிகளை தெரியும். எங்களுக்கும் எதிரிகளுக்கும் சந்து வழி சம்மந்தமான பிரச்சனை இருந்து வந்தது. கடந்த 30.10.2015 ம் தேதி மாலை 06.30 மணியளவில் நான் கடையில் இருந்து வீட்டிற்கு வந்தபோது எதிரி மாணிக்கம் அந்த சந்தில் செங்கல் வைத்து சுவர் வைத்தார்.

2. நான் கேட்டதற்கு தேவிடியா உனக்கு என்ன இங்கு வேலை என்று கேட்டார். நான் சுவர் வைத்ததை நான் வீடியோ எடுத்திருந்தேன் அதை ஆர். மாணிக்கம் எனது வலது கையை பிடித்து முறிக்கினார். அப்போது அம்பிகா மற்றும் மகாலட்சுமி ஆகியோர்கள் அங்கு வந்தார்கள். அப்போது அம்பிகா என்னை கண்ணத்தில் அடித்தார்.

3. எதிரி மகாலட்சுமி எனது கையை முறிக்கினார் அப்போது நான் கையில் வைத்திருந்த செல்போன் கீழே விழுந்துவிட்டது. அப்போது பிரவீனா என்னை எட்டி உதைத்து அந்த செல்போனில் இருந்த வீடியோவை டெலிட் செய்துவிட்டார். பின்பு எதிரிகள் என்னை பார்த்து தேவிடியா என்று அசிங்கமாக பேசினார்கள். மேலும் என்னை கொலை செய்துவிடுவதாக மிரட்டி எனது தாலியை அறுத்துவிடுவதாக மாணிக்கம் மிரட்டினார்.

4. சம்பவம் நடந்தவுடன் நான் புகார் கொடுக்கவில்லை. எதிரிகள் என்னை மீண்டும் மீண்டும் அசிங்கமாக பேசியதால் 5ம் தேதியன்று காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த புகார் அசாஆ.1 ஆகும்.** இது தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>.

1. எனது வீட்டுக்காரருக்கும் எதிரிகளுக்கும் இடையே 10-15 வருடங்களாக இடம் பிரச்சனை இருக்கிறதா என்றால் ஆமாம். திருக்கோவிலூரில் அசல் வழக்கு எண்.429/2006 என்ற வழக்கு தாக்கல் செய்து அதில் சொன்ன உத்தரவுப்படி நாங்கள் வைத்திருந்த காமவுண்ட் சுவரை இடித்துவிட்டார்கள் என்றால் அது நடந்தது 2006 ல். இந்த கேஸ் 2015 ல்.

2. 2-1/2 அடி சந்துதான் பிரச்சனையா என்றால் ஆமாம். எங்கள் வீடு கிழக்கு மேற்கில் எத்தனை அடி என்றால் எனக்கு தெரியாது. கிரைய பத்திரப்படி 15 அடிதான் பத்தியம் என்றாலும் அதிகமாக 17 அடி சேர்த்து வீடு கட்டிவிட்டு அதற்கு பிறகும் 2-1/2 அடி ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்ததுதான் பிரச்சனை என்றால் அந்த பிரச்சனை எனக்கு தெரியாது. சந்து யாருக்கு பாத்தியம் என்றால் பொது சந்து. அந்த வழக்கு உயர்நீதிமன்றத்தில் இன்னும் நிலுவையில் உள்ளது. நான் அவ்வாறு எதுவும் நிலுவையில் இல்லை பொய்யாக சொல்கிறேன் என்றால் நிலுவையில் உள்ளது.

3. எனது கணவர் மாணிக்கம், அம்பிகா மீது இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் திருக்கோவிலூரில் அசல் வழக்கு எண்.156/2015 என்ற வழக்கு தாக்கல் செய்து வாதிகள் தரப்பில் வழக்கிடை மனு எண்.254/2021 அனுமதிக்கப்பட்டு இதே வழக்கு மூலத்தில் வேறு ஒரு வழக்கு தாக்கல் செய்யும் உரிமையுடன் இவ்வழக்கு திரும்பப்பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. 1வது எதிரி சந்து பிரச்சனை சம்மந்தமான என் மீது ஒரு புகார் கொடுத்தாரா என்றால் எனக்கு தெரியாது. 1வது எதிரி கொடுத்த புகாரின் மீது நானும், நான் கொடுத்த புகாரின் மீது 1வது எதிரியின் மனைவியும் ஜெயிலில் இருந்தோம் என்றால் ஆமாம்.1வது எதிரி கொடுத்த புகாரின் மீது பதியப்பட்ட வழக்கில் அபராதம் செலுத்தியுள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் அதில் குற்றத்தை ஒத்துக்கொண்டு ரூ.1900/- அபராதம் செலுத்தியுள்ளேன் என்றால் தெரியாது.

5. புகாரை யார் எழுதி கொடுத்தது என்றால் நான் சொல்ல சொல்ல எனது கணவர் எழுதினார். புகாரை சம்பவம் நடந்து 5 நாட்கள் கழித்துதான் கொடுத்தேனா என்றால் ஆமாம். நான் மருத்துவமனைக்கு ஏதாவது சென்றேனா என்றால் இல்லை. சம்பவத்தை யார் பார்த்தார்கள் என்று புகாரில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் மாணிக்கம், பிரதீபா, சந்திரன் ஆகியோர்கள் பார்த்ததாக சொல்லியுள்ளேன்.

6. புகார் சம்பமந்தமாக போலீசார் எங்கு விசாரித்தார்கள் என்றால் வீட்டில் வந்து விசாரித்தார்கள். போலீஸ்டேசனிலும் விசாரித்தார்கள். மாணிக்கம் என்பவர் எனது கணவருக்கு உறவினரா என்றால் ஆமாம் அத்தை மகன். பிரதீபா எனக்கு சொந்தம்தான். பக்கத்து பக்கத்தில் இருப்பதால் தெரியும். நான் சொல்வதுபோல் ஒரு சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் நாங்கள்தான் ஆஜர் எதிரியை தாக்கிவிட்டு அதில் இருந்து தப்பிப்பதற்காக பொய் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.